MASTER NEGATIVE NUMBER

6040.10

நற்போதகம்

Vol. 24, no. 1

January 1872

Record no. 2697

Naṟpōtakam

Vol. 24, no. 1

January 1872

Record no. 2697

Roja Muthiah Research Library
3rd Cross Road, C P T Campus,
Taramani, Chennai - 600 113, India.

FRIENDLY INSTRUCTOR.

நற்போதகம்.

Vol. 24. January. No. 1.

Contents:

Bible Sketches and their Teachings. 2
Christian Church History. 3
The Parables of Christ. 5
On the Liturgy. 7
Notes on Genesis. 9
Communicant's Companion.... 12
A Family Commentary on the Sermon on the Mount. ... 14
Week of Prayer. 17
Summary of News. 19

அட்டவணை:

பாலபோதனை. ... ... உ
கிறிஸ்து சபை சரித்திரம். ௩
கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள். ... ... ரு
செப்புஸ்தக வியாக்கியானம். ... ... எ
ஆதியாகம வியாக்கியானம். ... ... கூ
நற்கருணை விளக்கம். ... ... கஉ
மலைப்பிரசங்க வியாக்கியானம். ... ... கச
ஜெபவாரம். ... ... கஎ
சமாசாரத்திரட்டு. ... ... ககூ

Palamcottah:

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.

1872.

Library's copy lacks front wrapper

க. ஜனுவரிமீ. ௲௮௱௨௰௫.

Bible Sketches and their Teachings.

பாலபோதனை.

அடிக்கப்பட்ட கன்மலை.

2 மோசே. 17. 1—7.

(தொடர்ச்சி.)

இந்த மொறமொறுப்பும் முரட்டாட்டமுமான சனங்களை நடத்தின மோசேக்கு எவ்வளவு கஷ்டம். அவனுக்கு விரோதமாய்க் கோபமூண்டவர்களாகி அவனைக் கல்லெறிந்து கொலைசெய்யவும் யோசனைபண்ணினார்களே. இந்தச்சீமை அவனுக்கு நன்றாய்த் தெரியும். நாற்பது வருஷமாய் எத்துரோவின் ஆடுகளோடு அங்கே அலைந்து திரிந்தவனல்லவா! அந்தக் காலத்தை நினைத்து, முன்போல் திரும்பவும் ஆடுமேய்த்தால் தாவிலையேயென்று ஒருவேளை சொன்னாலும் சொல்லியிருப்பான். ஒரு சனத்தை ஆளுவது ஆடுமேய்ப்பதுபோல் லேசா! ஆகிலும் இந்தச் சமயத்தில் அவன் தேவனைநோக்கி வேண்டிக்கொள்ளுகிறான். அதன்பேரில் தேவன் வேறொரு அற்புதம் செய்ய வாக்கு அருளுகிறார்.

மோசே மூப்பரிற் சிலரைக் கூட்டிக்கொண்டு, சனங்கள் பாளையமிறங்கியிருந்த பள்ளத்தாக்கிலிருந்து புறப்பட்டு மலையிலே தேவன் காண்பிக்கும் ஓரிடத்துக்குப் போகவேண்டும். எகிப்துதேசத்தில் மோசே அத்தனை அற்புதங்களை நடப்பிக்கிறதற்கேதுவாயிருந்த கோலையும் அவன் கையில் எடுத்துக்கொண்டுபோகவேண்டும். மலையிலே தூரமான ஓரிடத்திற் போனபின்பு அவன் கோலினால் அதை அடிக்கவேண்டும். உடனே அதிலிருந்து தண்ணீர் புறப்பட்டுவருமென்று தேவன் சொல்லியிருந்தார். தேவன் கற்பித்தபடி மோசே செய்தான். மோசே எவ்விடத்துக்குப் போயிருந்தானென்றும் தேவன் இன்னின்னபடி செய்யக் கற்பித்தாரென்றும் சனங்களுக்கும் ஒருவேளை தெரிந்திருக்குமே. தெரிந்திருக்குமாகில், அவனும் அவனோடு போன மூப்பர்களும் மலையிலேறி நடந்துபோகிறதை எவ்வளவோ ஆவலாய்ப் பார்த்துக்கொண்டு நின்றிருப்பார்கள். அவர்கள் ஆயாசமும் தாகமுமாயிருந்த அந்த நாளில் பொழுது எவ்வளவோ மெதுவாய்ப் போகிறது; அதோ ஒட்டகங்களெல்லாம் மலைக்குநேரே தலைகளை உயர்த்துகிறதைப்பார். இதோ மலையிலிருந்து குளிர்ந்த ஒரு காற்று எழும்பி, தாகத்தினாலே தொய்ந்துபோயிருந்த இஸ்ரவேலருக்கு நேரே வீசி அவர்களை உயிர்ப்பித்து பலப்படுத்துகிறதுபோலிருக்கிறதே. அதோ தூரத்தில் ஓர் சத்தம் கேட்கிறதே, அது என்ன சத்தம். நிமிஷத்துக்கு நிமிஷம் மேற்படி சத்தம் அதிகப்படுகிறது, கிட்டிவருகிறது. திர

Best copy available

ண்ட தண்ணீர்களின் இரைச்சல்போலிருக்கிறது. ஆம் கொஞ்சநேரத்துக்குள்ளாக ஒரு பெரிய ஆறு பள்ளத்தாக்கிலிறங்கி கரைபுரண்டு அநேகஞ் சிறு நீர்க்கால்களாகிப் பள்ளத்தாக்கு எங்குமோடி தாகத்தினால் தொய்ந்துபோயிருந்த சனங்களைக் குளிரப்பண்ணிற்று. ஆ எவ்வளவு சந்தோஷம். என்ன ஆர்ப்பரிப்பு. ஆடுமாடுகளெல்லாம் ஆற்றுக்கு விரைந்தோடுகிறதைப்பார். விருத்தாப்பியரும், வாலிபரும், தாய்களும், பிள்ளைகளுமாகிய சகலரும் மலர்ந்தமுகமாய் தண்ணீரண்டைக்குப் போகிறார்களே. இப்பொழுது மொறுமொறுப்புமில்லை, எகிப்தின்பேரிலாவது நீல் நதியின்பேரிலாவது நாட்டமுமில்லை. எல்லோரும் தங்கள் துரோகப் புத்தியையுஞ் சிந்தனையையும் விட்டு, ஏகோபித்து தேவனை ஸ்துதித்துப் பாடுவார்களாக.

பிரியமான பிள்ளைகளே "இந்தக் கன்மலை கிறிஸ்துவே" என்ற வேத வாக்கியத்தின் பொருளை நீங்கள் அறிவீர்களா? இந்தக் கேள்வியை நீங்கள் சிந்தித்து அதற்கு உத்தரவுசொல்லப்பார்க்கவேண்டுமென்று விரும்புகிறேன். நாமும் தாகமுள்ளவர்கள்தான். இந்த நம்முடைய உதடுகளும் நாவும் தாகத்தினால் வரண்டுபோயிருக்கின்றனவென்றல்ல, நம்முடைய ஆத்துமங்கள் வரண்டு விடாய்த்துப்போயிருக்கின்றன. நாம் சந்தோஷம் சமாதானத்தின்பேரில் தாகமுடையவர்கள். இதின் கருத்து இன்னதென்று நீங்கள் வளர்ந்தபின்பு நன்றாயறிவீர்கள். ஓரேப்பு மலையிலிருந்தல்ல, தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் வீற்றிருக்கும் ஆசனத்திலிருந்து இறங்கிவரும் ஜீவதண்ணீருள்ள நதியில் பானம்பண்ணுவது இன்னதென்றும் அறிந்துகொள்வீர்களென்று நம்புகிறேன். கிறிஸ்துநாதருடைய அன்பு உங்களைச் சந்தோஷப்படுத்தும். அது உங்களிடத்திலிருக்குமாகில், வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுகிற பரதேசிகளைப்போல நீங்கள் சிலவேளை சிறிது தாழ்ச்சியடைந்தபோதிலும், ரவீதிமிலே ஆண்களும் பெண்களும் மலையிலிருந்து இறங்கின குளிர்ந்த சலத்தைக்கண்டு சந்தோஷபூரிப்பானதுபோல நீங்களும் மறுபடியுஞ் சந்தோஷப்படச் சீக்கிரம் கற்றுக்கொள்வீர்கள். கிறிஸ்துநாதர் பிரயாணமாய்ப்போகும் ஓர்சமையத்தில் ஒரு ஸ்திரீயைநோக்கி, "எனக்குத் தாகத்துக்குத்தா" என்று சொன்னதை அறிவீர்களே. அவர் தாகத்துக்குக் கேட்டதைக்குறித்து அவள் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்க, அவர் அவளைப்பார்த்து, "நான் கொடுக்கிற தண்ணீரைக் குடிக்கிறவனெவனோ அவன் ஒருக்காலும் தாகமடையான். நான் அவனுக்குக் கொடுக்கிற தண்ணீர் அவனுக்குள் நித்தியஜீவன்பரியந்தம் ஊறுகிற ஊற்றாம்" என்று சொன்னாரே. இந்தச்ஜீவ தண்ணீரைத் தேடிக்கொள்ளும்படி அவரே தமது ஆவியானவரைக்கொண்டு உங்கள் யாவரையும் நடத்துவாராக. ஆமன்.

Christian Church History.

கிறிஸ்துசபைச் சரித்திரம்.

12. அதிகாரம்.

(தொடர்ச்சி.)

ரோமசேனையில் கிறிஸ்தவர்கள் மிகுந்திருந்தார்களென்றும், இராச்

சியத்தில் அங்கங்கே உயர்ந்த உத்தியோகங்களுடையவர்களாயிருந்தார்களென்றும், துரைத்தன விஷயங்களை நடத்திவந்தார்களென்றும், சங்கத்திற் சேர்ந்திருந்தார்களென்றும், இராயனுடைய மாளிகையிலும் சஞ்சரித்தார்களென்றும் தெர்த்துல்லியன் எழுதியிருப்பதாகச் சொல்லியிருக்கிறது. கிறிஸ்தவர்கள் தொகையில் ஏராளமாய்ப் பெருகிவிட்டதினால் துரைத்தன உத்தியோகங்களில் அவர்களை ஏற்றுக்கொள்ளாதபட்சத்தில் துரைத்தனகாரியங்கள் நடந்தேறிக்கொள்ள மாட்டாது. மேலும் கிறிஸ்தவ நூலாசிரியர்களும் அஞ்ஞான நூலாசிரியர்களைப்பார்க்கத் தொகையிலும் திறமையிலும் மிஞ்சிவிட்டார்கள். அஞ்ஞானக் கல்விமான்களிலும் தங்கள் மதாசாரத்தை நியாயபலத்தினால் நிலைநிறுத்தப்பார்த்தவர்கள் மிகவும் சிலர்தான். கிறிஸ்துமார்க்கத்தை எதிர்க்க அவர்கள் துணிந்தபோதும் நோஸ்தியர் தப்பறையாக அதைப் பாவித்துப் பேசியிருக்கிறார்கள். கிறிஸ்துமார்க்கம் பிரபலியமாகாதபடிக்குத் தடுக்க மிகுதியும் முயன்றவர்கள் அஞ்ஞான ஆலயங்களால் காலட்சேபம்பண்ணிவந்த பூசாசாரிகள்முதலியவர்களே. இவர்களும் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய்ச் சனங்களை ஏவிவிட்டது அஞ்ஞானத்தின்பேரில் சனங்களுக்கிருந்த அபிமானத்தைக்கொண்டல்ல. இதைமாத்திரம் அவர்கள் நம்பியிருப்பார்களாகில் அவர்கள் முயற்சிகள் சித்திபெறாமல் வியர்த்தமாகியிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. அஞ்ஞானத்திலுள்ள கட்டுக்கதைகளையும் அவலட்சணங்களையும் உண்மையாய் நம்பினவர்கள் அநேகரல்ல. கல்விமான்களில் அநேகர் கிரேக்கை ரோமைதேசஸ்தரின் அவபத்திகளைக் குறித்து பகிரங்கமாய்ப் பரியாசமும்பண்ணிவந்தார்கள். ஆகையால் அஞ்ஞானம் ஒழிந்து கிறிஸ்துமார்க்கம் வியாபித்துக்கொள்ளுமேயென்று அவர்கள் அவ்வளவாய் பயப்பட்டதினாலல்ல, அவர்களுடைய துர்நடத்தைகள் கிறிஸ்தவர்களால் பலமாய்க் கண்டிக்கப்பட்டதினாலேயே கிறிஸ்தவர்களைப் பகைக்கவும் துன்பப்படுத்தவும் ஏவப்பட்டார்கள்.

கிறிஸ்துமார்க்க விரோதிகள் கிறிஸ்துநாதரைப்போலும் அவரது அப்போஸ்தலர்களைப்போலும் பொய்யான பலரை ஏற்படுத்திக்கொண்டு, புதிய ஏற்பாட்டில் சுவிசேஷப் பிரசங்கிகள் நடப்பித்ததாகச் சொல்லியிருக்கிற அற்புத அதிசயங்களை அவர்களும் நடப்பித்ததாகப் பாராட்டிக்கொள்வது வழக்கமாயிருந்தது. அப்படியே அப்போலோனியு என்ற ஒருவனை அப்போஸ்தலர் காலத்திலே இருந்ததாகச் சொல்லிக்கொண்டார்கள். இவன் மெய்யாயிருந்தானோ என்பது சந்தேகம். ஒருவேளை மேற்படி பெயருள்ள சாஸ்திரி ஒருவன் முதலாம் நூற்றாண்டில் இருந்திருப்பானாகில், நம்பத்தகாத அநேக பொய்களையும் கட்டுக்கதைகளையும் அவனைக்குறித்து எங்கும் பரப்பினார்கள் என்பதற்குஞ் சந்தேகமில்லை. இக்காலத்தில் இராச்சியபாரந்தாங்கின இராயனுடைய மனைவியாகிய ஜூலியாள் கேட்டுக்கொண்டதின்பேரில் பிலோஸத்திரேத்து என்பவன் அவனைக்குறித்து எழுதிய சீவிய விர்த்தாந்தம் ஒன்று நாளதுவரையுமிருக்கிறது. இயேசுக்கிறிஸ்துநாதர் செய்த அற்புதங்களைப்போலமாத்திரமல்ல, அதற்கு மேலானவைகளையும் இவன் நடப்பித்தானென்று பிதற்றும் நோக்கமாகவே எழுதப்பட்டிருக்கின்றதென்று அதை வாசிக்கும் எவர்க்கும் தெரியாமற்போகாது. அதை எழுதினவன் சுவிசேஷத்தை வாசித்து கிறிஸ்துமார்க்கத்தை ஏற்படுத்தினவர் அற்புதங்கள் நடப்பித்த காரியத்தை அறிந்திருந்தான் என்பதும் நிச்சயம். இதினால் கிறிஸ்துமார்க்கத்துக்குரிய முக்கிய உதாரணங்களில் ஒன்று உறுதிபெறுகிறதைக் காண்கிறோம். கிறிஸ்துமார்க்கத்தைப் பிரபலப்படுத்தினவர்கள் அற்புதங்கள் செய்தார்களென்பதை ஒப்புக்கொள்வோமாகில், அது தீவிரமாய் விர்த்தியானது ஆச்சரியமாயிராதே. அற்புதங்கள் நடப்பிக்கப்பட்டது மெய்யென்பதை இரண்டாம் நூற்றாண்டின் கடைசியில் ஒப்புக்கொண்டது பரிஷ்காரமாயிருக்கிறது. கிறிஸ்துநாதர் அற்புதங்கள் செய்யவில்லையென்று அவர்கள் சாதிக்கவில்லை. அப்போலோனியுஎன்பவன் அவரைப் பார்க்க அதிகமான அற்புதங்களை நடப்பித்தானென்று ரூபிக்கமாத்திரம் பார்க்கிறார்கள். அற்புதங்களினால் கிறிஸ்துமார்க்க விர்த்திக்குக் கிடைத்த அனுகூலத்தைக் குறைக்கும் நோக்கமாக இந்தக் கள்ளனுடைய பெயரைப் பிந்தின இரண்டு நூற்றாண்டுகளிலும் பல சமயங்களில் எடுத்துச் சொல்லிவந்தார்கள். இந்த நோக்கமாகவே அவர்கள் கல்விமான்கள் சரித்திரங்களிலெல்லாம் அற்புத சங்கதிகளையுஞ் சேர்த்துக் கட்டியிருக்கிறார்கள். அவ்வாறே பைதாகோரு என்றவன் மகா அபூர்வமான அற்புதங்களை நடப்பித்ததாகவும் அவன் தன் சீஷர்களுக்கும் அந்த வரம் அளித்ததாகவும் பிதற்றிக்கொண்டார்கள். புதிய ஏற்பாட்டிற் காட்டிய அற்புதங்களை மறுக்கப்பார்ப்பது அசாத்தியமென்று கல்விமான்கள் எண்ணினதற்கு இதெல்லாம் அத்தாட்சியாகாதோ? இராச்சியபாரந் தாங்கின இராயனுடைய மனைவி அப்பொலோனியு என்பவனுடைய சரித்திரத்தை எழுதும்படி பிலாஸத்திரேத்து என்பவனிடத்திற் கேட்டுக்கொள்ளுகிறதை நாம் பார்க்கும்போது, கிறிஸ்துமார்க்கம் வெகுவாய்ப் பிரபலியமானதை அவள் கவனிக்க ஏவப்பட்டிருப்பாளென்று நிதானிக்கலாகுமே. இராயனைக்குறித்தும் இவ்விதமே சொல்லத்தக்கதென்றால், பிற்காலத்தில் அவன் கிறிஸ்தவர்கள்பேரில் விபரீதங்கொண்டு அவர்களைத் துன்பப்படுத்த ஏவப்பட்டதற்கு முகாந்தரம் காணலாம்.

The Parables of Christ.

கிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

VIII-வது. இரக்கம்பாராட்டாத வேலைக்காரனைக் குறித்து.

மத். 18: 23—35.

(தொடர்ச்சி)

உவமையை முடித்த பிறகு இரக்ஷகர் எச்சரிப்பாக ஒரு வார்த்தையைக் கூட்டுகிறார். நீங்களும் அவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால் என் பரமபிதாவும் அப்படியே செய்வார். அவ்வளவு கண்டிப்பாகவே நடத்துவார். கிருபையின் பொக்கிஷங்கள் அவரிடத்தில் நிறைவாயிருப்பதுபோல கோபாக்கினையின் பொக்கிஷமும் நிறைவாயிருக்கிறது. மன்னிப்பு எவ்வளவு அதிகமாயிருக்கிறதோ தெண்டனையும் அப்படி அதிகமாயிருக்கிறது. அவர்கள் தகாதவிதமாய்நடந்து, பிள்ளைகளுக்குரிய சொந்தத்தை மறந்துவிட்டபடியால் அவர்கள் பரமபிதாவல்ல, என் பரமபிதா என்கிறதாய் அருத்தம்பண்ணப்படாது. இப்படிப்பட்ட முகாந்தரம் இராதவேளையிலும இரக்ஷகர் இப்படியே பேசுகிறதுண்டு. 19-ம் வாக்கியம். வேதவசனத்திலுள்ள கருத்தைப் பார்க்கும்போது, கிறிஸ்த

வன் பெற்றுக்கொண்ட இரக்கத்துக்கும் பெறவேண்டிய இரக்கத்துக்கும் நடுவேநிற்கிறுன். இரக்கங்காட்டுவதற்கு முந்தினது சில வேளைகளில் காரணமாகச் சொல்லப்படுகிறது. கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். கொலோசர் 3: 13. எபே. 4: 32. சிலவேளைகளில் பிந்தினது காரணமாகச் சொல்லப்படுகிறது. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் இரக்கம்பெறுவார்கள். மத். 5: 7. விடுதலைபண்ணுங்கள், அப்போது நீங்களும் விடுதலைபண்ணப்படுவீர்கள். லூக். 6: 37. யாக். 5: 9. சீராக்கின் குமாரன் சொல்லுகிறதாவது, ஒருவன் இன்னொருவனுக்கு விரோதமாய்ப் பகையைவைத்துக்கொண்டு கர்த்தரிடத்தில் மன்னிப்பைத்தேடுகிறுஞ? தன்னைப்போலொத்த மனிதனுக்கு இரக்கங்காட்டாதவன் தன் பாவங்கள் மன்னிக்கப்படவேண்டுமென்று எப்படி விரும்பலாம்! இரக்கம்பெற்றேன் என்கிற முகாந்தரத்தையிட்டு மற்றவர்களுக்கு இரக்கம் காட்டுவதுபோல் தனக்கு இன்னம் இரக்கம் வேண்டுமென்கிற காரணத்தையிட்டும் அப்படிச் செய்யவேண்டும். எவ்வளவு அதிகமாய் இரக்கம்பாராட்டுகிறுர்களோ அவ்வளவு அதிகமாய் இரக்கம்பெறுவார்கள். மத். 5: 7 ஐ வியாக்கியானம்பண்ணுகிற ஒருவர் சொல்லுகிறதாவது. இரக்கம்பாராட்டினவர்களுக்கு இரக்கங் கிடைக்கும் என்று சொல்லும்போது, இரக்கம்பெறுதவர்களைத்தான் இரக்கம்பெற்றவர்களென்று சொல்லியிருக்கிறது என்று எண்ணவேண்டியதிருக்கும், அது சரியல்ல. தன் சீவனுட்களில் மனுஷன் ஒருதரம் மாத்திரம் இரக்கம்பெறவேண்டியவனல்ல. அது மனுஷனுடைய சீவனுள்முழுவதிலும் அவன் பெறவேண்டிய காரியம். மறுமையில்தான் அது முடிவடையும். தேவன் மனிதனுக்குக் காட்டவேண்டிய இரக்கமும், மனிதன் மனிதனுக்குக் காட்டுகிற இரக்கமும் ஒன்றுக்கொன்று ஆதாரமென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இதில் காண்கிற ஒரு விகற்பத்தையும் இந்தக் கருத்து நிவர்த்தியாக்குகிறது. இந்த உவமையில் குறிக்கப்பட்டிருக்கிற காரியங்கள் நடந்தகாலம் எப்போ? இந்த உலகத்தின் முடிவில் நடக்கிற காரியங்களைக் குறித்துத்தான் இங்கே சொல்லியிருக்கிறதென்று தீர்மானிக்க இடமுண்டு. பின்னை எப்பொழுது தேவன் மனிதரிடத்தில் கணக்குப் பார்த்து அவர்களைத் தெண்டிப்பார்? அல்லது விடுதலைசெய்வார்? உலகத்தின் முடிவிலே. இது நடக்கிறதாயிருக்குமானுல் மன்னிப்பைப்பெற்ற வேலைக்காரன் தன் உடன் வேலைக்காரனுக்கு விரோதமாய்க் கொரேகுணத்தைக் காட்டுகிறதற்குச் சமையமில்லையேயென்கிற ஆக்ஷேபனையும் தோன்றுகிறது. பாவி பெறுகிற மன்னிப்பு ஒரு சமையத்தில் நடந்துபிறகு நின்றுபோகிற காரியமல்ல. மீட்கப்பட்டவர்களுடைய சீவனுளெல்லாம் அதுவும் நடந்துகொண்டேயிருக்கிற காரியம். எப்பொழுதும் குறைவுள்ளவர்களானபடியால் எப்பொழுதும் மன்னிப்பைப்பெறுவதும் அவசியம்.

இந்த உவமையின் கருத்தை விளக்கிக்காட்டுகிற ஒரு சிறு சரித்திரம் சொல்லி இந்த வியாக்கியானத்தை முடிக்கிறேம். அந்தியோகியாவிலிருந்த ஒரு கிறிஸ்தவனுக்கும், ஒரு குருவானவருக்கும் மனவிரோதமிருந்தது. கிறிஸ்தவன் ஒப்புரவாக மனமாயிருந்தான். குருவானவருக்கு மனமில்லை. இந்தச் சமையத்தில் வல்லீரின் என்பவனுல் கிறிஸ்தவர்களுக்குத் துன்பம் உண்டாயிற்று. குருவானவர் தைரியமாய் தன்னைக் கிறிஸ்தவனென்று அறிக்கையிட்டு, இரத்தச்சாக்ஷியாய் மரிக்கக் கொண்டுபோகப்பட்டார். அந்தக் கிறிஸ்தவன் வழியில் அவரைச் சந்தித்து மன்னிப்புக்காகக் கெஞ்சினுன். குருவானவருக்கோ இன்னும் மன்னிக்க மனமில்லை. மரிக்கவேண்டிய இடத்துக்கு வந்தார்கள். குருவானவர் பயந்து விக்கிரகங்களுக்கு பலியிட்டு, கிறிஸ்தவன் எவ்வளவோ தைரியம் சொல்லியும் கேளாமல் விசுவாசத்தை மறுதலித்துப்போட்டார். கிறிஸ்தவனே தைரியமாய்க் கிறிஸ்துவை அறிக்கையிட்டு அவருக்குப் பதிலாக இரத்தசாக்ஷியாய் மரித்து சீவ கிரீடத்தைப்பெற்றுன். கிறிஸ்துவை அறிக்கையிடத்தக்க கிருபையை குருவானவர் பெறுமுன்னே அவர்பட்ட 1,0000 தாலந்துக்கடன் மன்னிக்கப்படவேண்டும். தன் சகோதரன்மேலிருந்த அற்ப மனஸ்தாபத்தை மன்னிக்க மனமற்றவராயிருந்தபடியால் தனக்குக் கிடைக்கும் மேன்மையை இழந்துவிட்டார். அவருடைய எசமான் அவர்மேல் கோபமாகி தமது கிருபையை அவரைவிட்டு எடுத்து தன் பழைய நிலைமையில் விழுந்து கெட்டுப்போகும்படி செய்தார். யாதொரு கொடுமையும் செய்யாவிட்டாலும் மன்னிக்க மனமற்றிருக்கிற குணமே நம்மை அந்த இரக்கமற்ற ஊழியக்காரனுக்குச் சமமாக்கிப் போடும். மனப்பூர்வமாய் மன்னிக்கவேண்டும். எபேசியர் 6: 6.

On the Liturgy.

செபபுஸ்தக வியாக்கியானம்.

ரு. அதிகாரம்.

ஓய்வுநாளுக்கும் மற்ற பரிசுத்தநாளுக்குமுரிய சுருக்கச் செபங்கள், நிருப சுவிசேஷ வாக்கியங்களைக் குறித்து.

(தொடர்ச்சி.)

I. அடுவெந்து ஞாயிறுகளைக் குறித்து.

விசேஷித்த பண்டிகைகள் மூன்றுண்டு. பிறப்பின் பண்டிகை, உயிர்த்தெழுந்த பண்டிகை, பரிசுத்தாவியின் பண்டிகை இதுகளுக்காக ஆயத்தப்படும்படிக்கும் செவ்வையாய் ஆசரிக்கும்படிக்கும் இதுகள் ஒவ்வொன்றுக்கும் முந்தியும் பிந்தியும் சில நாட்கள் குறிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துமஸ் பண்டிகைக்குமுன் நாலு ஓய்வுநாட்கள் வருகிறது. இரக்ஷகர் மனிதனுய் அவதரித்ததை இதுகள் நமக்கு ஞாபகப்படுத்துகிறபடியால் இதுகளுக்கு அடுவெந்து ஞாயிறுகளென்று பெயர். பரிசுத்த பேதுரு இந்த அடுவெந்து நாட்களை ஏற்படுத்தினதாக உரோமான் மார்க்கத்தார் சொல்லுகிறுர்கள். ஏற்பாடான காலத்தைத் திட்டமாய்ச் சொல்ல ஏதுவில்லாவிட்டாலும், 450 ம் வருஷத்துக்குமுன்னே இவைகள் இருந்ததென்று திட்டமாய்ச் சொல்லலாம். அப்பொழுதிருந்த மாக்கிஸ்மஸ் தாரினென்சஸ் என்பவர் இதைக்குறித்து ஒரு பிரசங்கம் எழுதியிருக்கிறுர். இந்த நாட்களைப் பிரயோசனமாய்ப் பின்னிடத்தக்கதாக லெந்தென்னும் வாரங்களில் இப்போது சில கோயில்களில் நடந்து வருகிறதுபோல் இந்த நாட்களிலும் புதன், வெள்ளிகளில் விசேஷித்த பிரசங்கங்கள் நடப்பித்திருந்தது. அந்த நாட்களுக்கு விசேஷித்த நிருப சுவிசேஷவாக்கியங்களும் ஏற்படுத்தியிருந்தார்கள்.

இரண்டாவது, அடுவெந்து முதலாம், இரண்டாம் ஞாயிறுகளில்

வழங்கும் சுருக்க செபங்கள் 1549 ம் வருஷத்தில் முதல் கூட்டப்பட்டது. மூன்றும் ஞாயிறுக்குரிய சுருக்க செபம் இராசாங்கம் ஒழுங்குப்பட்டபோது சேர்க்கப்பட்டது. அதற்கு முன்னிருந்தது வெகு சுருக்கமானதுமல்லாமல் காலத்துக்கேற்றதுமல்ல. நாலாம் ஞாயிறுக்குரிய சுருக்க செபம் பூர்வீகத்திலிருந்தபடியே இருக்கிறது. இந்த நாட்களுக்குரிய நிருப சுவிசேஷ வாக்கியங்கள் பூர்வீகமானது மாத்திரமல்ல, சங்கதிக்கு மிகவும் இசைவானது. முதலாம் ஞாயிறுக்குரிய நிருப சுவிசேஷ வாக்கியங்களும், இரண்டாம் ஞாயிறுக்குரிய நிருப வாக்கியமும், மூன்றும் ஞாயிறுக்குரிய சுவிசேஷ வாக்கியமும், நாலாம் ஞாயிறுக்குரிய நிருப சுவிசேஷ வாக்கியங்களும் இரக்ஷகர் உலகத்துக்கு வந்த சத்தியத்தை உறுதிப்படுத்தத்தக்கது. இரண்டாம், மூன்றும் ஞாயிறுக்குரிய சுவிசேஷ வாக்கியங்கள் அவர் இரண்டாம் விசை வரும்போது சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களைத் தெண்டிப்பார். ஆகையால் அவர் வந்த நோக்கத்துக்குத்தக்கதாக நம்முடைய நடக்கையைச் சீர்ப்படுத்தவேண்டுமென்று நம்மை எழுப்பி விடுகிறது.

மூன்றுவது. சபையானது அடுவெந்து நாட்களோடுதான் வருஷத்தை ஆரம்பிக்கிறது என்பதை நாம் மறக்கக்கூடாது. சூரியனைக்கொண்டல்ல, ஏசு இரக்ஷகரைக்கொண்டே தன் காலத்தைக் கிரமப்படுத்துகிறது. நீதியின் சூரியனுகிய அவர் அப்போதுதான் விடிவெள்ளி போல் உதயமாகத்தொடங்கி அறிவீனமாகிய அந்தகாரத்தில் கிடந்தவர்களைப் பிரகாசிப்பிக்க ஆயத்தமானுர்.

II. எம்பர் வாரங்களைக் குறித்து.

எம்பர் வாரங்களில் முதல் வாரம் அடுவந்தில்வரும் மூன்றும் ஞாயிறுக்குப்பின் வருகிறதால் அதைப்பற்றித் தெரிந்ததை இங்கே சொல்வது நல்லது. எம்பர் வாரங்கள் நாலுவிசை வருஷந்தோறும் ஒழுங்காய்வரும். அந்தக் காலங்களில் குருப்பட்டம்பெறுகிறவர்கள்பேரில் தேவாசீர்வாதம் தங்கும்படிக்கு உபவாசித்துச் செபம்பண்ணுவதற்காக இந்த நாட்கள் ஏற்படுத்தப்பட்டது. அப்போஸ்தலருடைய வழக்கத்துக்கிசைவாய் இந்த ஒழுங்கு இருக்கிறது. அவர்கள் தேவஊழியத்துக்கென்று ஆட்களைப் பிரித்தபோது கைகளைச் சிரசின்மேல் வைக்கு முன்னே உபவாசித்துச் செபம்பண்ணினதாகப் பார்க்கிறோம். அப். 13: 3. சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட துவக்கத்தில் அவசரமானபோதெல்லாம் குருப்பட்டங்கொடுத்தார்கள். சபை ஸ்திரப்பட்டபிறகு குருப்பட்டம்பெறுகிறதற்கு விசேஷித்த காலங்களை ஏற்படுத்தினுர்கள். இந்த ஏற்பாட்டிலிருந்துதான் இந்த எம்பர் வாரங்கள் தோன்றின.

இரண்டாவது. எம்பர் என்பது ஜர்மன் வார்த்தை: இதற்கு உபவாசமென்று அருத்தம். இங்கிலீஷில் தணல் என்று அருத்தங்கொள்ளும். உபவாசம்பண்ணும் காலங்களில் தங்களைத் தாழ்த்தும்படிக்கு பூர்வீகத்தார் சாம்பலை மேலேபோட்டுக்கொள்ளுகிறதுமல்லாமல் அதின்மேல் உளுக்காந்துமிருப்பார்களாம். அந்த உபவாசம் முடியுமுன் தணலில் சுட்ட அப்பங்களையும் சாப்பிடுவார்களாம். இதற்கு தணல் அப்பமென்று பெயர். வேறுசிலர் இதை சாக்சன் வார்த்தை என்றும், அதற்கு முறை என்று அருத்தமென்றும் சொல்லுகிறுர்கள். ஏனெனில் இது சில காலங்களில்மாத்திரமல்ல வருஷந்தோறும் முறையேவருகிறது. எம்பர் நாட்களென்று சொல்லும்போது வருஷந்தோறும் முறையே அல்லது ஒழுங்காய்வருகிற உபவாசநாட்களென்று பொருள்.

Notes on Genesis.

ஆதியாகம வியாக்கியானம்.

௩. அதிகாரம்.

(தொடர்ச்சி.)

7. சாத்தானுடைய வாக்கு சீக்கிரம் நிறைவேறத் துவக்கிற்று. தாங்கள் பிடிபட்ட கண்ணியையும், தங்களுக்கு வந்த நிர்ப்பந்தத்தையும் வியாகுலத்தோடும் திகிலோடும் காண "அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது." 5 வியா. காண்க.

"நிருவாணிகளென்றறிந்து," முன் அவர்கள் சரீர நிருவாணம் அவர்களுக்கு வெட்கமாயல்ல, மகிமையாய்க் காணப்பட்டது. 2: 25. வியா. காண்க. ஆனுல் இப்பொழுது அவர்களுக்கிருந்த குற்றமின்மையாகிய வஸ்திரம் உரியப்பட்டு, தேவனுடைய சாயலும், ஆதரவும், மகிமையான சந்நிதியும் எடுபட்டுப்போய், பாவம் அவர்கள் மனச்சாட்சியைக் கறைப்படுத்தினதால் அவர்கள் நிருவாணம் வெட்கத்தை உண்டாக்கிற்று. இது, அவர்கள் வருவித்துக்கொண்ட வெட்கமான நிலைமையை அவர்களுக்குச் சுட்டிக்காட்டிக்கொண்டேயிருந்தது. "தைத்து" இலைகளைப் பின்னியும் இளங்கிளைகளை முடிந்தும் உடுத்திக்கொண்டார்கள். என்றாலும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கூடாமற்போயிற்று. இது மனிதருடைய சுயநீதியையும் தங்கள் பாவங்களை மறைத்துக்கொள்ளும்படி செய்கிற பயனற்ற வீண் பிரயத்தனங்களையும் காட்டுகிறது.

8. தேவ வார்த்தையாகிய எகோவா மனிதரூபமாக இப்பொழுது காணப்பட்டாரென்று பெரும்பாலும் நினைக்கப்படும். அப்படியே பழைய ஏற்பாட்டில் அடிக்கடி வாசிக்கிறோம். தமது மனித அவதாரத்தைக்குறித்து உலகத்தாருக்கு முன்னறிவைக்கொடுக்கும்படி இப்படிக் காணப்பட்டிருக்கலாம்.

சிலவேளை மட்டாயும் மற்றவேளை பயங்கரமாயும் ஒளியிட்ட செக்கினுவின் தோற்றங்கள் இவ்விடத்தில் "கர்த்தருடைய சந்நிதி" என்று சொல்லப்படுகிறதாக, சில கல்விமான்கள் யூதரபிமாருடைய எண்ணங்களை ஆதாரமாய் வைத்து வியாக்கியானம்பண்ணுகிறுர்கள். ஆனுல் இதற்கு வேத அத்தாட்சியில்லை.

"பகலில் குளிர்ச்சியானவேளையிலே" ஆதாம் ஏவாள் வழக்கமாய் தேவனை ஆராதிக்கிற நேரமென்று நினைக்கப்படுகிறது. இப்படிப்பட்ட வேளையில், பிள்ளைக்கு இளக்காரம் கொடுக்கிற அன்புள்ள தகப்பனை பட்சமுள்ள பிள்ளை ஆவலாய்த் தழுவுகிற வண்ணம் அவர்கள் "கர்த்தருடைய சந்நிதியை" ஆனந்த மகிழ்ச்சியோடு தரிசித்து தொழுது வருவார்கள். ஆனுல் இப்பொழுது வெட்கத்தினுலும், மனச்சாட்சியின் வேதனையினுலும், நியாயத்தீர்ப்புக்குப் பயந்ததினுலும் ஒளித்துக்கொண்டார்கள்.

9. "நீ எங்கேயிருக்கிறுய்." வெகு திகிலைக் கொடுக்கத்தக்க வார்த்தைகள். ஒருவேளை கடைசி நியாயத்தீர்ப்புநாள்வரையும் மனிதர் காதுகளில் இது தொனிக்கப்படாது. தீர்மானமும் மாறுமையுமான நமது கட்டளைக்கும் பயமுறுத்தலுக்கும் விரோதமாய் உங்கள்

மீறுதல் பிரத்தியட்சமாயிருக்கிறதே என்னமாயிருக்கிறாய் என்பது
போல் கேட்கிறார்.

10. "சத்தத்தைக் கேட்டு" மகிமையைக் கண்டு என்கவில்லை.
ஆதலால் அவனை பயப்படுத்தத்தக்க ஏது ஒன்றையும் அவன் காண
வில்லை என்று விளங்குகிறது. தான் ஒளித்த காரணத்தை (11. வா.)
நேராய்ச் சொல்லி அறிக்கையிட்டு மன்னிப்புக்கேளாமல் நழுவுகிறவ
கையாய் பாவத்தினால் வந்த பலனைச் சொல்லுகிறான்.

12, 13. "ஸ்திரீ கொடுத்தாள்" பிரத்தியட்சமான தன் குற்றத்
தை நேராய் ஒத்துக்கொள்ளாமல், தேவனுக்குக் கீழ்ப்படிவதைப்பார்
க்கிலும் ஸ்திரீக்குக் கீழ்ப்படிய உத்தரவுபெற்றவன்போல தன் குற்றத்
தை அவள்மேல் போட்டான். உள்ளபடி அது தேவன்மேல் குற்றஞ்
சாட்டுகிறதாயிருந்தது. "தேவரீர் தந்த ஸ்திரீ கொடுத்தாள் நான்
புசித்தேன் என்றான்." அவன் இருதயத்தில் இப்போ வீற்றிருந்த பிசா
சின் சற்பனையினால் இந்தக் கெட்டபுத்தி வந்தது. ஏவாளும் ஆதா
மைப் பின்பற்றி நீர் உண்டாக்கின சர்ப்பந்தான் என்னை வஞ்சித்த
து என்ற பாவனையாய்ச் சொல்லுகிறாள்.

14, 15. "சபிக்கப்பட்டிருப்பாய்" (1.வியா.) மனிதர் பாவஞ்செய்
யுமுன் சர்ப்பம் விஷமில்லாத அழகுள்ள ஜெந்தாயிருந்ததென்று நினை
க்கப்படுகிறது. ஆனால் இப்பொழுது மூர்க்கமும் கேடுமுள்ள ஊர்வன
மாகி, மற்றப்பிராணிகளைப் பழியாய் விஷந்தீண்டி உயிர்ச்சேதஞ்செய்
கிறது. மனிதர் மற்ற மிருகங்களைப்பார்க்க அதின்மேல் அதிகப் பகை
சாதித்து தலையில் அடித்து நசுக்கிக் கொல்லுகிறார்கள். அவை மண்ணை
தொட்டிக்கொண்டு மண்கலந்த இரையைத் தின்கிறது. மீகா. 7: 17.
இப்படியாக பிசாசின் சோதனைக்கு இது கருவியாயிருந்ததினாலே இந்த
பகிரங்கமான தண்டனைக்குட்பட்டதாக வாக்கியம் அர்த்தங்கொள்
ளலாம். யாத்தி. 32: 20. லேவி. 20: 15, 16. ஆனால் உள்ளபடி அதற்
குள் ஒளித்திருந்த சாத்தானே சபிக்கப்பட்டான். சர்ப்பத்தின் மூல
மாய் ஏவாளை வஞ்சித்தபடியினாலே அந்தச் சர்ப்பத்தின் மூலமாயே
சபிக்கப்பட்டான். "வயிற்றினாலே (அல்லது மார்பினாலே) நகர்ந்து"
என்பது உயரத்திலிருந்து தள்ளப்பட்ட அவனுடைய இழிவான நீச
நிலைமையையும் (யூதா 6. வாசி.) "மண்ணைத்தின்பாய்" என்பது மனி
தனைக் கெடுத்து தேவனை கனவீனம்பண்ண முயலுவதே அவன் போ
சனம்போல் மனிதனை துன்மார்க்கரும் சிற்றின்பப்பிரியருமாக்குவ
தில் அவன் பிரியப்படுகிற அவனுடைய ஈனத்தன்மையையும், அற்
பத்தனத்தையும் குறிப்பாய்க்காட்டுகிறது. ஏசா. 65: 25.

பாவியான மனிதருக்கு இரக்கமுள்ள தேவன் அருளக்கூடிய
எல்லா ஆசீர்வாதங்களும் சாத்தானைச் சபித்த வார்த்தைகளில் தொ
கையாய் அடங்கியிருக்கிறது. 15 வாசி. இது தீர்க்கதரிசனமாயும்
வாக்குத்தத்தமாயுமிருக்கிறது. மனிதர் கேளாமலும் கேட்கும்படி
நினையாமலுமிருந்தும் கிருபையாய் அருளப்பட்டது. இது உரைக்கப்
பட்டநாள்முதல் நாளதுவரை எந்நேரமும் நிறைவேறிவருகிறதாயி
ருந்தும் இன்னம் முழு நிறைவேறுதல் அடையவில்லை. இது சுவிசேஷ
முழுவதையும் அடக்கியதாயும், எக்காலத்திலும் எவ்விடங்களிலும்
அதற்குண்டாகும் அபஜெயங்களையும் கடைசியாக அது அடையும்
வெற்றியையும் காலமுடிகிறவரைக்கும் முன்னறிவிக்கிற சரித்திரக்
கொத்தாயும், உயர்ந்த பரம ஞானமுள்ளதாயுமிருக்கிறது.

"உன் வித்துக்கும்" பிசாசும், அவன் தூதர்களும், பொல்லாத
மனிதரும் சர்ப்பமாயும் சர்ப்பத்தின் வித்தாயுமிருக்கிறார்கள். யோ

வான் 6: 70. நடபடி 13: 10. 1 யோவான் 3: 8. அவர்கள் தங்கள்
"பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்." தங்கள் பிதா
வினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறார்கள்.

"அவள் வித்துக்கும்" இது கன்னிகையிடத்தில் கிறிஸ்து மனித
அவதாரமெடுத்ததைக் குறிக்கும். கிறிஸ்துதாம் ஸ்திரீயின் வித்து.
கலா. 4: 5. ஏனென்றால் அவரே மனித ஜாதியில் சிறந்தவர். என்று
லும் அவருடைய பிள்ளைகளும் அவயவங்களுமாகிய மெய்க்கிறிஸ்த
வர்கள் அவரோடு ஒன்றாயிருக்கிறபடியால் அவர்களையும் குறிக்கும்.
எபேசி. 5: 30. 1 கொரி. 12: 27. எபிரே. 2: 13. கலா. 3: 28. யோவா.
17: 22. ஆதாம் ஏவாள் ஆகிய இருவருடைய சந்ததியில் கிறிஸ்து பிறந்
திருந்தும், ஆதாமின் வித்து என்னப்படாமல் ஸ்திரீயின் வித்து என்
னப்படுகிறார். சாத்தான் முதலாவது ஸ்திரீயை மேற்கொண்டதா
லும், விசேஷமாய் நமது கர்த்தர் கன்னியாஸ்திரியின் கர்ப்பத்தில்
அற்புதமாய் உற்பவித்துப் பிறந்ததை தீர்க்கதரிசன அறிகுறியாய்க்
காட்டவும் இப்படிச் சொல்லியிருக்கிறது. ஏசா. 7: 14. லூக். 1: 34, 35.

"பகையுண்டாக்குவேன்." தேவன் தாமே இவ்விரு எதிர்கட்
சிக்கும் பகையுண்டாக்கினார். மெய்க்கிறிஸ்தவர்கள் உள்ளத்தில்
அவர் அருளுகிற கிருபையின் பலன் இந்தப் "பகை"யே. பாவிக
ளான மனிதருக்கு விரோதமாயல்ல, அவர்களுடைய கெட்டகுணத்
துக்கும், அவர்கள் தரித்திருக்கிற சாத்தானுடைய சாயலுக்கும், தாங்
கிவருகிற அவன் இராச்சியத்திற்கும் விரோதமாய் ஸ்திரீயின் வித்
தானவர்கள் ஓயாமல் போராடுகிறார்கள். ஏனென்றால் "பிசாசினு
டைய கிரியைகளை அழிக்கும்படி வெளிப்பட்டவரிலிருந்த "சிந்தை"
இவர்களிலுமிருக்கிறது. இவர்கள் குண நடத்தையும், உலகத்தின்
துன்மார்க்கங்களை எதிர்த்துத் தடுத்து அதற்கு விரோதமாய் இவர்
கள் பகருகிற சாட்சியும், தேவன் இவர்களுக்கு அனுக்கிரகிக்கிற சித்
தியுமெல்லாம் கூடி பிசாசின் பெருமையைத் தாழ்த்தி அவன் அதிகா
ரத்தையும் அக்கிரமத்தையும் எதிர்க்கிறது. ஆனதால் அவனும் அவன்
வித்தாரும் தீராப்பகையும், அகங்காரமும், பொறாமையும் கொண்டு,
பகிரங்கமான கொடுமையினாலும், குரூரமான துன்பங்களினாலும், ரக
சியமான சற்பனையினாலும், இழிவான தூஷணங்களாலும், தந்திர
மான சோதனைகளாலும், கேடான வேதப்புரட்டுக்களாலும் ஸ்திரீ
யின் வித்தாருக்கு விரோதமாய்ப் போராடுகிறார்கள். இப்படிச்
செய்வதில் அவர் குதிங்காலை நசுக்குகிறார்கள். விசேஷமாய் "நீ
அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்பதில், "குதிங்கால்" கிறிஸ்து
வின் மனிததன்மையையும், "நசுக்குவாய்" என்பது அவருடைய
பாடுகள் மரணத்தையும் குறிக்கும். இப்படியாக "மகிமையின் கர்த்
தரை அவர்கள் சிலுவையில் அறைந்த"தாலும், அவருடைய பிள்ளை
களை லட்சக்கணக்காய்த் துன்பப்படுத்திக் கொலைசெய்ததாலும், எக்
காலத்திலுமுள்ள அவர் சனங்களை உள்ளும் புறம்புமாய் இடுக்கண்
செய்துவருகிறதினாலும் அவர் குதிங்காலை நசுக்கத்தக்க அளவு கொ
டுமைசெய்துவருகிறார்கள். ஆனால் இதெல்லாம் சாவுக்கேதுவான
அடியல்ல. ஏனென்றால் இவர்கள் நித்திய சீவனை அடையாதபடி முற்
றிலும் அழித்துப்போட அவர்களால் கூடவில்லை.

"அவர் உன் தலையை நசுக்குவார்." அதாவது, நீ அவர் குதி
ங்காலை நசுக்குவதைக்கொண்டே உன் வல்லமையையும் அதிகாரத்
தையும் அழித்து வெற்றியடைவார் என்பது கருத்து. எப்படியெனில்
அவரை நசுக்கிவிடுவேன் என்று சாத்தான் நினைத்துச் செய்த பிரயத்

தனங்களினுல் உண்டான அவருடைய பாடு மரணத்தினுலேயே அவன் சற்பனையால் மனிதர் மீறின நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி "அதின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டு" அவன் தலையை நசுக்கினர். எபி. 2: 14. 15 வாசி. இப்படி மரணத்தின் கூரை ஒடித்து "கட்டளைகளால் நமக்கு விரோதமாயிருந்த கையெழுத்தைக் குலைத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகள்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்." இப்பொழுது மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்தருளி "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும்" உடையவராய் "தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து" "தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே" கோடாகோடிப்பேரை பிசாசின் வல்லமைக்குத் தப்புவித்து நாளடவில் அவன் சீவனை மாய்த்துவருகிறர். அப்படியே எக்காலத்திலுமுள்ள அவருடைய பிள்ளைகளும் அவருடைய ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட தேவவசனமாகிய பட்டயமுதலிய நீதியின் ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு அவருடைய ஆவியின் பலத்தால் போராடி அவனை தங்கள் கால்களின்கீழே நசுக்கிவருகிறர்கள். உரோ. 16: 20. கடைசியாக நமது கர்த்தர் "அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில்" அவனுடைய சகல அதிகாரத்தையும் முற்றிலும் பரிகரித்துவிடுவார். வெளி. 19: 17—21. 20: 1—3. 11—15.

இவ்விதமாய் நித்தியகாலபரியந்தமுள்ள வேதசரித்திரம், திருச்சபைசரித்திரம், உலகசரித்திரமெல்லாம் இந்த ஒரே வாக்கியத்தில் பொழிப்பாய் அடங்கியிருக்கிறது. இது நமது வேதம் தேவனுல் உண்டானதென்பதை எக்காலத்திலும ரூபிக்கிற அக அத்தாட்சியல்லவா?

Communicant's Companion.

நற்கருணை விளக்கம்.

ரு. அதிகாரம்.

கர்த்தருடைய பந்தியைச் சேர்ந்து தங்கள் உடன்படிக்கையைப் புதுப்பிக்கிறவர்களுக்குச் சொல்லப்படுஞ் சில யோசனைகள்.

(தொடர்ச்சி.)

(2) மாம்ச இச்சைக்கும் அதினுடைய நடத்துதலுக்கும் இடங்கொடாமல் தள்ளவேண்டும். சரீரமானது ஆத்துமாவோடே நெருங்கின சம்பந்தமுடையதாயிருந்தாலும் இதை அது ஆளும்படி இடங்கொடுக்கக்கூடாது. ஆத்துமாவானது பரத்துக்குரியவைகளை நாடும்படியாக நாம் அதை ஒப்புக்கொடுத்திருக்க, மண்ணுக்குமண்ணுய்ப்போகிற சரீரம் அதை ஆளும்படி இடங்கொடுக்கக்கூடாது. எஜமான் கால்நடையாய்ப் போவதும் ஊழியக்காரன் வாகனத்தின்மேலேறிப் போவதும் இயல்பல்ல. ஆகையினுலே மாம்ச இச்சைக்கு நாம் இடங்கொடாமல் அதைச் சிலுவையில் அறையும்படி பார்க்கவேண்டும்.

(3) இந்த உலகத்தையும் உலக வேடிக்கைகளையுந் தள்ளவேண்டும். மறு உலகத்தின் மகிமை நமக்கு வேண்டுமென்ற விருப்பமிருந்தால் இவ்வுலக இன்பங்களையும் வெறுப்போடே தள்ளவேண்டும். பராபரனும் மம்மோனும் ஒருவருக்கொருவர் எதிரிடையாயிருப்பதால் நாம் இருவருக்கும் ஊழியஞ்செய்யக்கூடாது. பராபரனைச் சிநேகித்து அவரைப் பற்றிக்கொள்ள மனதிருந்தால் உலகத்தால் ஆளப்படாதபடிக்கு அதைவிட்டு விலகவேண்டும். மேலும் நாம் கிறிஸ்துவையும் அவருடையவர்களையுஞ் சேர்ந்தவர்களான சால் இவ்வுலகத்தாருக்கு ஒப்பாய் நடவாமல் அவர்களை விட்டுப் பிரிந்து அசுத்தமானதைத் தொடாதிருக்கவேண்டும். மேலும் நமக்குப் பரத்திலே அழிவும் அசுத்தமுங் குன்றுதலுமில்லாத சுதந்தரமிருப்பதால் நாம் இவ்வுலகப் பொருளால் இழுக்கப்பட்டுக் கறைப்பட்டுப்போகாமலிருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

III. நாம் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைச் சுவிசேஷத்திலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிற பிரகாரம் அங்கிகரித்துக்கொள்ளவேண்டும். நாம் தேவனோடே உடன்படிக்கைபண்ணுவதில் பாவத்தையும் உலகத்தையும் வெறுத்துப் பசாசின் நுகத்தடியைத் தள்ளிவிடுவது மாத்திரம் போதாது. கிறிஸ்து ஏசுவை ஏற்றுக்கொண்டு அவர் நுகத்தடிக்குட்படுவதற்கும் சம்மதிக்கவேண்டும். சுவிசேஷத்திலும் இந்தச் சாக்கிரமெந்திலும் கிறிஸ்துவின் நித்திய இரக்ஷிப்பே நித்திய வாழ்வாகக் கையளிக்கப்பட்டிருக்கிறது. அதில்லாமற் பாவி அதோகதியாய்ப்போவான். ஆகையினுலே நாம் இந்த இரக்ஷிப்படையும்படி தேவனோடே உடன்படிக்கைபண்ணவருவதில் நாம் முற்றிலும் அவர் காட்டிய வழியே நடக்கும்படியான தீர்மானத்தோடே வரவேண்டும். கிறிஸ்து காட்டிய வழியையல்லாமல் வேறே வழியாய் நமக்கு இந்த இரக்ஷிப்புப் பாத்தியப்படமாட்டாது. அவருடைய இரக்ஷிப்பை அடைய விரும்புகிறவர்கள் சகலவித மேட்டிமையையுந் தள்ளித், தூசியிலுஞ் சாம்பலிலுமிருந்து தங்களைத் தாழ்த்தவேண்டும். தேவனுக்கும் நமக்கும் அடுத்த காரியத்தை நம்முடைய காரியக்காரரும் மத்தியஸ்தருமாகிய இயேசுக்கிறிஸ்துவின் கையில் ஒப்புக்கொடுக்கவேண்டும். "இவர் என்னுடைய குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று ஒருவிசையைப்போல் இரண்டுவிசை கூறியிருக்கிறர். கிறிஸ்து இயேசுவினுடைய கிருபைக்கு இசைந்து அவருடைய இரக்ஷிப்பை அங்கிகரிக்கிறவர்கள் இவர் என்னுல் நேசிக்கப்படத்தக்க இரக்ஷகர், இவரிற் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிறவர்களாயிருக்கிறர்கள். கிறிஸ்துவின் இரக்ஷிப்பை அங்கிகரிக்கிறவர்கள் அவருடைய ஆளுகைக்குட்படவேண்டும். கிறிஸ்துவை அங்கிகரிக்கிறவர்கள் அரைகுறையாயல்ல, முற்றிலும் அவரை அங்கிகரிக்கவேண்டுமே. அவர் நம்மை நீதிமான்களாக்கி இரக்ஷிக்கிறதுபோல நம்மைப் பரிசுத்தவான்களாக்கி ஆளுகிறவராயுமிருக்கிறர்.

IV. நம்மைத் தேவனுக்கு முற்றிலும் ஒப்புக்கொடுக்கவேண்டும். தேவன் நம்மோடே பண்ணின உடன்படிக்கையில் நமக்கு வேண்டிய வரப்பிரசாதங்களைக் கொடுத்ததுமாத்திரமல்ல, தம்மையே நமக்குக் கொடுத்திருக்கிறர். "நாம் அவர்களுக்குத் தேவனுயிருப்போம்" என்று சொல்லியிருக்கிறர். அவர் தம்மிலே எப்படிச் சம்பூரணமுள்ளவராயிருக்கிறரோ நமக்கும் அப்படியே சம்பூரணமுள்ளவராயிருக்

கிருர். நாம் அவருக்குப் பண்ணின உடன்படிக்கையிலும் நாம் அவருக்கு ஊழியஞ்செய்கிறதோடுகூட நம்மையே அவருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். (அதாவது) நமது சரீரத்தையும், ஆத்துமாவையும், ஆவியையும் பிதாக் குமாரன் பரிசுத்தாவியாகிய திரியேக தேவனுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுப்போமென்று வாக்குக்கொடுத்திருக்கிருேம். கர்த்தருடைய பந்தியைச் சேரும்போது இப்படி நம்மை அவருக்குப் பிரதிஷ்டைசெய்யவேண்டும். இப்படி நம்முடைய சரீரங்களும் ஆத்துமங்களையும் தேவனுக்கு ஜீவனுள்ள பலியாகச் செலுத்தும்படியாக அவர் தம்முடைய பிராயச்சித்தத்தினுலே சம்பாதித்த கிருபாநதியாகிய புண்ணியபலன்களே நம்மை ஏவுகிற ஏதுக்களாயிருக்கவேண்டும். தேவன் நம்முடைய சிருஷ்டிகரும், பாதுகாக்கிறவரும், உபகாரியும், மீட்பருமானதால் நம்மைத் தமக்குச் சொந்தமான சொத்தாக ஏற்றுக்கொள்வது நியாயந்தானே.

A Family Commentary on the Sermon on the Mount.

மலைப்பிரசங்க வியாக்கியானம்.

மத்தேயு 6: 14, 15.

(தொடர்ச்சி.)

"மனிதருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்.—மனிதருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்."

கிறிஸ்து இந்த மலைப் பிரசங்கத்தில் தம்முடைய சீஷர்களுக்கு (மத். 5: 7.) "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் இரக்கம் பெறுவார்களென்றும்," (5: 44.) உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் செபம்பண்ணுங்கள் என்றும், கர்த்தருடைய செபத்தில் (6: 12.) "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" என்றும் சொல்லுகிறபடி அவர்கள் தங்கள் சத்துருக்களுக்கு இரங்கவும் அவர்களைச் சிநேகிக்கவும் வேண்டுமென்று அவர்களுக்கு ஏற்கனவே போதித்திருக்கிருர்.

நமக்குச் செய்யப்படும் நஷ்டங்களை மன்னித்து விட்டுவிடவேண்டுமென்பது கிறிஸ்துமார்க்கத்தின் சிறந்த உபதேசங்களில் ஒன்றென்று மேலே விவரித்துச் சொல்லியிருக்கிருேம். மேலும் இந்த உபதேசத்தைக் கிறிஸ்து வெகு தெளிவாய்ப் போதித்திருப்பதால், கிறிஸ்தவர்களென்னப்பட்டவர்களில் அநேகர் இதின்படி செய்வதைவிட்டு நழுவிவிடப்பார்த்தாலும் இதை ஒத்துக்கொள்ளுகிருர்களென்றுங் கவனித்தோம்.

இப்போதும் சகிப்பற்ற, அல்லது மன்னிக்குந் தன்மையில்லாத

குணந்தோன்றுஞ் சமயங்களைக்குறித்தும், இந்நாட்களில் அந்தச் சகிப்பற்ற குணத்தை மறைப்பதற்குக் கையாடப்படும் போக்குச்சாக்குகள் வேஷங்களைக்குறித்தும் பேசிக்கொள்வோமாக.

இந்தச் சகிப்பற்ற குணந் தோன்றுஞ் சமயம் வெவ்வேறு மனிதருக்கு வெவ்வேருயிருக்கும். மொத்தமாய்ச் சொல்லுகில் மனிதர் தங்கள் பொருளுக்குச் செய்யப்படுஞ் சேதங்களைச் சகித்தாலும் தங்கள் பெருமைக்குக் குறைவாக ஏதாவது செய்யப்படும்போது அது விசையிற் கைபோடுவதற்குச் சமதையாயிருப்பதால் அப்பேர்ப்பட்ட குறைவுகளை லேசாய்ச் சகிக்கமாட்டார்கள். ஆகையால் நம்முடைய சொத்தை நஷ்டப்படுத்தினவர்களையும் நமது வீட்டையிடித்துக் கன்னமிட்டுத் திருடின திருடனையும் நாம் மன்னிக்கிறபடியால், நமக்குள்ளே மன்னிக்குஞ் சிந்தையிருக்கிறதென்று நினைக்கவேண்டாம். இப்படிப்பட்ட குற்றவாளிகளை அதிகாரிகள் தேசசட்டப்படி தப்பாமல் தண்டிப்பார்களே. நாம் அவர்களை மன்னித்ததெங்கே? ஆனுல் யாராவது எந்தக் காரியத்திலாகிலும் நம்முடைய பெருமைச் சுபாவத்துக்கு இடையூருக யாதொன்றை நமக்குச் செய்தால் அப்பேர்ப்பட்டவர்களுக்கு மன்னிக்கிருேமா என்று நம்மைச் சோதிப்போமாக. இங்கே நாம் கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. என்னவென்ருல், மிகவும் பெரிதும் பிரபலியமுமான சேதங்கள் அத்தனை அதிக விசனத்தைக் கொடுக்க ஏதுவானவைகளல்லவென்பதுதான். ஏனென்ருல், நமக்கு நேரிட்ட நஷ்டம் பெரிதென்று உலகங் கவனிக்கிறதென்றும், அப்பேர்ப்பட்ட பிரபலியமான சேதங்களை நாஞ் சகித்தால் உலகம் நம்மை மெச்சிக்கொள்ளுமென்றும், நாம் அடைகிற நஷ்டம் பெரிதாயிருக்கையில் அநேகர் நமக்காகப் பரிதபித்து நமது பட்சத்திலிருந்து நமக்கு நஷ்டஞ்செய்தவர்களை குற்றப்படுத்துவார்களென்றும் நாம் அறிந்து அதிக விசனமடையமாட்டோம். ஒருவன் நமக்கு யாவருங் கவனிக்கத்தக்க குற்றஞ்செய்து அவர்களால் இகழ்ச்சியடைவது தேசசட்டப்படி அவன் கடினமாய்த் தண்டிக்கப்படுவதற்குக் கிட்டத்தட்டச் சமதையாயிருப்பதால், நம்முடைய சகிப்பற்ற குணஞ் சாந்தமடையும். ஆதலால் இப்படிப்பட்ட விஷயங்களில் நாம் அவர்களை மன்னிப்பதையிட்டு நம்முடைய சத்துருக்களை மன்னிக்கிறவர்களென்று நம்மையெண்ணி மெச்சிக்கொள்ளக்கூடாது. ஒருவன் உலகத்தை நமது பட்சத்திலல்ல, தன் பட்சத்திலிருந்து பேசப்பண்ணத்தக்க உபாயமானவிதமாய் நமக்கு நஷ்டஞ்செய்யும்போதும், அதையிட்டு அவனுக்கு எந்தத் தண்டனையாவது தொந்தரவாவது வராதபோதும் நாம் அவனுக்கு மன்னிக்கிருேமா என்று நம்மைக் கேட்போமாக. இப்படிப்பட்ட விஷயங்களில் நாம் அவனுக்குத் தாராளமாய் மன்னிக்கக்கூடுமானுல் அது நமக்குள்ளே மன்னிக்குந் தன்மை மெய்யாகவே உண்டென்பதற்குப் பலத்த குறியாகும். சகிக்கக்கூடாததும் நம்மை மிகவுங் கோபமூட்டத்தக்கதுமான குற்றங்களை ஒருவேளை மற்றவர்கள் நமக்குச் செய்வார்களென்பது உள்ளதுதான். முற்கோபமுள்ள சிலருக்கு அது மிகுந்த மனவருத்தமுண்டாக்குமென்பதும் நிசமே. ஆனுல் இப்படிக் கொஞ்சநேரத்துக்கு மனங்கொதித்துத் தாங்கலனேந்து கோபங்கொள்ளுகிறது வேறு, மனதிலே வன்மம் வைக்கிறது வேறு, இரண்டும் ஒன்றல்ல. முக்கியமாய் நாம் யாருக்காவது விரோதமாக உட்பகையை மனதிலே பேணிவைக்கவேகூடாது. அதற்கு நாம் மிகவும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். அதற்குப் பதிலாக நான் சத்துருவாகப் பாவித்து எண்ணும் எந்த மனிதனுவது இந்தப் பூதலத்தில்

இல்லை. நான் எல்லாரோடும் அன்பாகவுஞ் சமாதானமாகவுங் குடியிருக்கிறேன் என்று நாம் ஒவ்வொருவருஞ் சொல்லக்கூடியவர்களாயிருக்கவேண்டும்.

ஆகையால் நமக்கு விரோதமாகக் குற்றஞ்செய்கிறவர்களுக்கு மன்னிக்கிறோமா என்றுமாத்திரமல்ல, எந்தக் குணத்தை அவர்களுக்குக் காட்டுகிறோம், தயைதாட்சணியமுள்ள, கபடற்ற, நட்புள்ள, களங்கமற்ற குளிர்ந்தகுணத்தை அவர்களுக்குக் காட்டுகிறோமா? அல்லது அவர்களோடு பேசாமல் மௌனமாயிருந்து அவர்களை அண்டாமல் அவர்களைக் காண்கையில் விலகிப்போகுந் தன்மையுள்ளவர்களாயிருக்கிறோமா? அவர்கள் நமக்கு விரோதமாகக் குற்றஞ்செய்யுமுன் அவர்கள் சந்தோஷப்படும்போது நாமும் அவர்களோடு சந்தோஷப்படுவோமே; அவர்கள் அழும்போது நாமும் அவர்களோடு அழுவோமே; அந்தப்படியே அவர்கள் நமக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தபின்புஞ் செய்கிறோமா? மற்றவர்கள் நமக்குச் செய்யுந் தப்பிதங்களையும் குற்றங்களையும் நாம் மனப்பூர்வமாய் மன்னித்ததேயுண்டானால் காரியம் இப்படியேயிருக்கும். அப்படிக்கில்லாமல் அவர்களுக்குண்டாகும் மகிழ்ச்சியையும் வாழ்வையுங்குறித்து நாம் உள்ளுக்குள்ளாக துக்கப்படுவதும் அவர்களுக்குச் சிறுமையும் இடையூறும் நேரிடும்போது சந்தோஷப்படுவதுமுண்டானால், அது அவர்களுக்கு மன்னிக்குந்தன்மை நமக்கில்லையென்பதற்குப் பலத்த குறியாகும். ஏனென்றால் மன்னிப்பென்பது மன்னிக்கிறேனென்கிற வார்த்தையைமாத்திரங் குறியாமல், நாம் எந்த மனதோடும் ஆவியோடும் மன்னிக்கிறோமோ அதையும், குற்றம் நடந்தபின்பு குற்றஞ்செய்தவர்களுக்கு முன்போல் தயைதாட்சணியங்காட்டுவதையும், அவர்களுக்கு நல்மனங்காட்டுவதையுங் குறிக்கிறது. நாம் தேவனைநோக்கி எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். நாம் அவரிடத்தில் மன்னிப்புக் கேட்கும்போது அவர் நமக்குத் தயவாகவும், கிருபையாகவும், பிரியமாகவும் இருக்கவேண்டுமென்ற நோக்கமாக அல்லவா கேட்கிறோம். இன்னும் அவர் நாம் லேசாய் அண்டக்கூடாதவராகவும், பிள்ளைகள்போல் நாம் அவரைச் செபத்தின்மூலமாய்க் கிட்டிச்சேர இடங்கொடாதவராகவும், நமதுமேற் பிரியம்வைக்காமல் தூரமாய் விலகிவிடுகிறவராகவும், நம்மைத் தம்மண்டை வரவழைப்பதற்குப்பதிலாக நாம் அவருடைய சமூகத்தைவிட்டு அப்புறம்போக விரும்புகிறவராகவும் இருப்பாரானால் நம்முடைய தப்பிதங்களை அவர் மன்னித்துவிட்டாரென்று நாம் எண்ணுவோமா? எண்ணமாட்டோம்.

ஆகையால் நாம் எந்தவிதமாய் மற்ற மனிதருக்கு அவர்களுடைய தப்பிதங்களை மன்னிப்போமோ அந்தவிதமாகவே நம்முடைய பரமபிதாவும் நமக்கு மன்னிப்பாராகையால், நாம் அவர்களுக்கு மன்னிக்கும் மன்னிப்பின் தன்மை எப்படிப்பட்டதென்று திட்டமாய் ஆராய்ந்தறிவோமாக. ஆ! நாம் தேவனிடத்திற் பெற்றுக்கொள்ளத்தேடும் மன்னிப்பின் தன்மைக்கும் நாம் மற்றவர்களுக்குக் காட்டுகிற குணத்துக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது. தேவன் நாம் தமக்கு விரோதமாக ஒருதரமாத்திரமல்ல, அநேகந்தரஞ்செய்த பெரிய குற்றங்களையெல்லாம் இலவசமாயும், பூரணமாயும், முழுமனதோடும் மன்னிக்கவேண்டுமென்று விரும்பிக் காத்திருக்கிறோம். ஆனாலோ, நாம் நம்முடைய அயலான் நமக்கு விரோதமாக ஒருதரமாத்திரஞ் செய்த அற்பக் குற்றத்தை அல்லது சேதத்தையிட்டு அவன்மேற் கோபங் கொள்ளுகிறோம். அவனுக்கு மன்னிக்கும்போதும் முழுமனசோடு மன்னிக்கிறதில்லை. ஒரு நிச்சயமற்ற பாரம்பரையான பேச்சு, சந்தேகங் கொள்ளத்தக்க ஒரு வார்த்தை, ஒருவனுடைய சமுசயப் பார்வை நம்மைக் கோபமூட்டிவிடுகிறது. மற்றவர்கள் நமக்கென்ன சமாதானஞ் சொன்னாலும் நம்முடைய கோபம் லேசாய் ஆறுகிறதில்லை. ஒருவன் தன் காகிதத்துக்குப் பதிலெழுதப்படாததையிட்டும், இன்னொருவன் தான் சந்தித்தவன் தன்னைச் சந்திக்கவராததையிட்டும், வேறொருவன் இந்த அந்த அற்பக்காரியத்தில் தான் நினைத்திருந்தபடி தனக்குப் பெருமையும் மரியாதையும் நடக்காததையிட்டும், இப்படி அநேகரும் ஒவ்வொரு அற்ப முகாந்திரத்தையிட்டு விசனப்படுகிறார்கள். இப்பேர்ப்பட்ட அற்ப முகாந்திரத்தையிட்டு நம்முடைய அருமைச் சிநேகிதர் மேலுங்கூட நமக்கொருவேளை கனகசப்புண்டாகும். அது நம்முடைய மனதைவிட்டுப்போவது வருத்தமாகி, அவர்களுக்குங்கூட நாம் மன்னிப்பது பிரயாசையாயிருக்கும்.

நமக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தவர்களை நாம் நடத்தும் விதத்துக்கும், தேவன் நம்மை நடத்துமபடி நாம் விரும்பும் விதத்துக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது. இந்தக் குணஞ் சீருக்கு வரும்படியாக, நாம் தேவனுக்கு விரோதமாகச் செய்திருக்கிற தப்பிதங்களை அடிக்கடி நினைப்போமாக. நம்முடைய பாதகங்களை மன்னிக்கும்படி நாம் அவரைக் கருத்தாய் மன்றாடுவதோடுகூட அயலாருக்கு மன்னியாத குணம் நமக்குள் எவ்வளவுமிராதபடி மிகவுங் கவலையாயிருப்போமாக.

Week of Prayer.

1872ம் வருஷத் துவக்கத்தின்

ஜெபவாரம்.

ஜெனவரிமீ 7உ முதல் 14உ வரை.

ஜெனவரிமீ 7உ. ஞாயிறு.

பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட சத்திய உபதேசம் எங்குமுள்ள கிறிஸ்துசபையை எப்பொழுதும் ஒருமைப்பாட்டில் கட்டத்தக்கதாகையால், எல்லா விசுவாசிகளும் அதைக் காத்துப் பிரபலஞ் செய்யக் கடமைப்பட்டவர்களென்பதைக் குறித்து பிரசங்கம்.

8உ. திங்கள்.

தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற சொல்லிமுடியாத ஈவுகள், தனக்கும் மற்றவர்களுக்கும் கிடைத்திருக்கிற இரக்கங்கள், சமாதானம், பஞ்சமுதலிய தேசத் துன்பங்களினின்று விடுதலை, கிறிஸ்து சபைக்குக் கிடைத்திருக்கும் ஆசீர்வாதங்கள், கிறிஸ்துவின் இராச்சிய பிரபலியம், கிறிஸ்துமார்க்கப் போதகத்தால் உண்டான பிரயோசனம் இவைகளுக்காக துதிசெலுத்துதல்.

9உ. செவ்வாய்.

நம்முடைய சொந்தப் பாவங்கள், தேசத்தாருடைய பாவங்கள், பெலவீன விசுவாசம், சபையிலுள்ள கீழ்ப்படியாமை, உலக சிந்தை இவைகளுக்காக நம்மைத் தாழ்த்தி, தேவ தெண்டனைகள் நியாயமெ

ன்று அறிக்கையிட்டு, நம்முடைய உண்மைத்தாழ்ச்சியை ஒப்புக்கொண்டு, முன்போல் மார்க்கம் சிறப்புற்றோங்கவேண்டுமென்று செபம்.

10வ. புதன்.

மற்றவர்களுக்காக செபம்.

குடும்பங்களுக்காக, ஜெனனதேசத்திலும் மற்றத்தேசங்களிலுமுள்ள கிறிஸ்தமான தாய் தந்தைகளுடைய குமாரர் குமாரத்திகளுக்காக, பள்ளிக்கூடங்கள், கல்விச்சாலைகள், சர்வகலாசாலைகளிலுள்ளவர்களுக்காக, வர்த்தகமுதலிய தொழிலிற் பிரவேசிக்கப்போகிறவர்களுக்காக, கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்ளுகிறவர்களுக்குள்ளே உள்ளானஜீவன் வளரும்படியாக, குணப்படாதவர்கள் குணப்பட, தாய் தந்தைகளுக்கும் பிள்ளைகளுக்கும் துன்பங்கள் ஆசீர்வாதமாய்ப் பலிக்க செபம்.

11வ. வியாழன்.

மற்றவர்களுக்காக செபம்.

இராஜாக்களுக்காக, அதிகாரஸ்தர்களுக்காக, மற்றத் தேசத்தார், முக்கியமாய் யுத்தத்தினால் வரும் துன்பங்களை அனுபவித்தவர்களுக்காக, ஆலோசனை சபைகளில் சமாதானமுண்டாக, எல்லாச் சனங்களுக்குள்ளும் நீதி, ஒருமை, நல்லொழுக்கமுண்டாக, நல்லறிவு பரம்பி அவிசுவாசம், அவபத்தி, குடிமுதலிய துர்க்கிர்த்தியங்களை நீக்கும்படி செய்யும் பிரயெத்தனங்களை வாய்க்கச்செய்ய தேவாசீர்வாதத்துக்காக செபம்.

12வ. வெள்ளி.

மற்றவர்களுக்காக செபம்.

கிறிஸ்துசபைக்காக, கண்காணிமார், மூப்பர்கள், போதகன்மார், மிஷியனெரிகள் முதலியவர்களுக்காக, பற்பல பாஷைகளில் வேதாகமத்தைத் திருப்புகிறவர்களுக்காக, சங்கங்கள் கமிட்டிமார் மற்றும் அனுவற்காரர், கிறிஸ்துமார்க்கத்துக்குரிய புஸ்தகங்களை எழுதுகிறவர்களுக்காகச் செபம்.

13வ.. சனி.

பரிசுத்தாவியைத் திரளாய் ஊற்ற, கிறிஸ்துமார்க்கத்துக்குரிய அன்பும், பரிசுத்த வைராக்கியமும் பெருக, தேவ மகிமைக்காக, விசுவாசிகள் செபத்திலும் பிரயாசத்திலும் ஒன்றுகூட செபம்.

14வ. ஞாயிறு.

"உம்முடைய இராச்சியம் வருவதாக. பூமியில் உம்முடைய சித்தஞ் செய்யப்படுவதுபோல பரலோகத்திலுஞ் செய்யப்படுவதாக. மத். 6: 10.

கவனிப்பு. தினந்தோறும் தனிமையாயும் குடும்பத்திலேயும் பின்வரும் ஒழுங்கின்படி வாரந்தோறும் செபித்துவரலாம்.

ஞாயிறு. ஓய்வுநாட் பள்ளிக்கூடங்களுக்காக, 10 லட்சம் பேர் இதுகளில் படித்துக்கொடுத்துவருகிறார்கள்.

திங்கள். கிறிஸ்தமான மிஷியோன்களுக்காக.

செவ்வாய். வேதாகம சங்கங்களுக்காக.

புதன். அடிமை வியாபாரம், குடிவெறி நீங்க.

வியாழன். சன்மார்க்க புத்தகங்களுக்காக.

வெள்ளி. யாவர்பேரிலும் பரிசுத்தாவியானவர் ஊற்றப்பட.

சனி. சுவிசேஷ போதகன்மார்களுக்காக, இவர்களுடைய தொகை 90,000.

Summary of News.

சமாசாரத்திரட்டு.

இங்கிலந்து. மஹா ராஜாத்தியவர்களின் சிரேஷ்ட குமாரரும் பிரின்ஸ் ஆப்வேல்ஸ் என்று பேர்வகித்தவருமான இளவரசர் ஜுரங் கண்டு வருத்தமாயிருந்தாரென்று முன் தெரிவித்தோமே. சென்றமீ 9ம் தேதி சனிக்கிழமை அவர் மரணவஸ்தையாய்க்கிடக்க, அவர் தாயார், பத்தினியார், தம்பியாகிய டியூக் எடின்பரோ இவர்கள் சூழநின்று, அவர் எந்த நிமிஷத்திலும் தேகவியோகமாவாரென்று காத்திருந்தார்களென்றும், காற்றில் தத்தளிக்கும் தராசைப்போல் அவர் இனத்தார் நம்பிக்கை மேலும் கீழுமாய் ஆடிக்கொண்டிருந்ததென்றும்; அவர் சிலவேளை மனமயங்கியும், சிலவேளை தெளிந்தபுத்தியுடனுமிருந்தாரென்றும் மின்சமாசாரங்கள் வந்தன. கடைசியாய் வந்த சமாசாரத்தினால் அவர் சற்றே சௌக்கியமாயிருக்கிறாரென்றறிந்து சந்தோஷமானோம். மகா ராஜாத்தியவர்கள் இந்திய கவர்னர் ஜெனரலுக்கு தமது குமாரருடைய ஸ்திதியைப்பற்றி மின்தபால்வழியாக செய்தி அனுப்பினார்கள். அவர் அந்தச்சமாசாரம் பெற்றவுடனே சென்னபட்டணம் கவர்னர் முதலான பெரியோருக்குக் கம்பிவழியாய்த் தெரிவித்தார். சீமையில் எண்திசையிலும் உள்ள கோவில்களில் தேவாராதனை நடந்தபொழுது, அவருக்காக விசேஷ பிரார்த்தனை செய்யப்பட்டது. அமெரிக்கா தேசத்திலுள்ளோர் அங்கிலேய ராஜகுமாரர் சுகசெய்தியைக்குறித்து மின்னமார்வழியாக அடிக்கடி தங்களுக்குக் கிடைத்த சமாசாரங்களை அதிக சிந்தையோடே கேட்டார்கள். அவர் அநுகூலமடையும்படிக்கு விசேஷ விண்ணப்பங்கள் அங்கேயும் தேவனுக்குச் செய்யப்பட்டனவாம்.

ருஷிய புருஷியர். டிசம்பர்மீ 8வ ருஷிய ராஜதானியாகிய ஸாந்துபீற்றர்ஸ்புர்க் நகரியில் நடந்த ராஜவிருந்தில் ருஷிய சக்கரவர்த்தி புருஷிய சக்கரவர்த்தியைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசி, அவரை வந்தனம்பண்ணி, ருஷிய புருஷியர்கள் தலைமுறைதோறும் ஒருவரோடொருவர் சமாதானமாயிருப்பார்களேயாகில், அவர்கள் இருதிறத்தாருடைய சேனைகளின் திறமையினால் ஐரோப்பாவில் எங்கும் சமாதானம் தலைப்படுவதற்கு ஏதுவாயிருக்குமென்று பிரஸ்தாபித்தாராம்.

பிரான்சு. சென்றமீ 8வயில் பிரான்சியதேச சபைகூடிய சமயத்தில் தேயர்துரை, பிரான்சியருக்கும் ஜர்மானியருக்கும் உண்டான உடன்படிக்கை சமாப்திபெற்றதென்றும், இனி அவர்களோடே சமாதானம் பங்கப்படாமல் நடக்குமென்றும், அங்கிலேய துரைத்தனத்தாருக்கும் பிரான்சிய துரைத்தனத்தாருக்கும், விலகிய சக்கரவர்த்தியினால் உண்டாக்கப்பட்ட வர்த்தக உடன்படிக்கையைப் பிரான்சியர் வருகிற வருஷாரம்பத்தில் தள்ளிவிடுவார்களென்றும், பிரான்சிய சேனைகள் சீரான ஸ்திதியில் இருக்கின்றனவென்றும், பிரஜைகள் மனப்பூர்வமாய் வரிப்பணம் கொடுக்கிறார்களென்றும் தெரிவித்தாராம்.

கல்கத்தா. சிரேஷ்ட நியாயாதிபதியைக் கொன்ற பாதகனை பங்காக்காரன் ஒருவன் தரையில் விழுத்தி அடித்தானே. அவனுக்கு கல்கத்தா நகரத்தார் வெகுமதியாய் மூந்நூறு ரூபாய் கொடுத்ததுமல்லாமல், இறந்துபோன நீதியதிபர் பத்தினியும் ஐம்பது ரூபாய் கொடுத்தார்.

ஜனுவரியீ நாள் 31-மார்கழியீ 19உமுதல், தையீ 19உவரை.

வாரம்.	சாதாரண தேதி.	தமிழ்த் தேதி.	அன்றுடகத் தியானம்.
தி	1	ககூ	என் ஆயுசு நாட்கள் கொஞ்சமாயிருக்கிறது. 1 மோசே. 47: 9.
செ	2	உ0	தேவன் உங்களுக்கு இரக்கம் கிடைக்கப்பண்ணுவாராக. 43: 14.
பு	3	உக	தேவன் உனக்குக் கிருபை செய்யக்கடவர். 29.
வி	4	உஉ	நீங்கள் நன்மைக்குத் தீமைசெய்ததென்ன! 44: 4.
வெ	5	உங	கர்த்தர் இன்று ஸ்தோத்திரிக்கப்படுவாராக. 1 இராசா. 5: 7.
ச	6	உச	என் சனமாகிய இஸ்ரவேலைக் கைவிடாதிருப்பேன். 6: 13.
ஞா	7	உரு	கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. 8: 11
தி	8	உசு	இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம். 15.
செ	9	உஎ	தேவன் எனக்கு உயர்ந்த அடைக்கலம். சங்கீதம் 59: 17.
பு	10	உஅ	தேவனே மறுபடியும் எங்களிடமாய்த் திரும்பும். 60: 1.
வி	11	உகூ	இக்கட்டில் எங்களுக்கு உதவிசெய்யும். 11.
வெ	12	ங0	மனுஷனுடைய உதவி விருதா. 11.
ச	13	க	தேவனாலே பராக்கிரமம் செய்வோம். 12.
ஞா	14	உ	உம்முடைய செட்டைகளின் மறைவிலே வந்தடைவேன். 61: 4.
தி	15	ங	உமது நாமத்தை என்றைக்கும் கீர்த்தனம்பண்ணுவேன். 8.
செ	16	ச	கர்த்தரை நம்புகிறவன் செழிப்பான். நீதிமொழி 28: 25.
பு	17	ரு	தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன். 26.
வி	18	சு	தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான். 27.
வெ	19	எ	நீதிமான் பாடி மகிழுகிறான். 29: 6.
ச	20	அ	இரத்தப்பிரியர் உத்தமனைப் பகைக்கிறார்கள். 10.
ஞா	21	கூ	நீ என் பார்வைக்கு அருமையானவன். ஏசாயா 43: 4.
தி	22	க0	பயப்படாதே, நான் உன்னோடே இருக்கிறேன். 5.
செ	23	கக	என்னையல்லாமல் இரட்சகர் இல்லை. 11.
பு	24	கஉ	கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள். ஓசியா 6: 1.
வி	25	கங	அவரே நம்மைக் குணமாக்குவார். 1.
வெ	26	கச	குமாரனை விசுவாசியாதவன் சீவனைக் காண்பதில்லை. யோ. 3: 36.
ச	27	கரு	அவர் உனக்குச் சீவதண்ணீரைக் கொடுத்திருப்பார். 4: 10.
ஞா	28	கசு	நீங்கள் அறியாத ஒரு போசனம் எனக்குண்டு. 32.
தி	29	கஎ	நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன். வெளிப். 21: 5.
செ	30	கஅ	நான் அவன் தேவனாயிருப்பேன். 7.
பு	31	ககூ	அவன் என் குமாரனாயிருப்பான். 7.

விசேஷித்த நாட்கள்.

1. கிறிஸ்து விருத்தசேதனப் பண்டிகை.
7. வெளிப்படுத்தலென்னும் பண்டிகைக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு.
10. அமாவாசை.
14. வெளிப்படுத்தலென்னும் பண்டிகைக்குப்பின்வரும் இரண்டாம் ஞாயிறு.
21. வெளிப்படுத்தலென்னும் பண்டிகைக்குப் பின்வரும் மூன்றும் ஞாயிறு.
25. பௌர்ணமி.
28. செப்துவகெசிமாவென்னும் ஞாயிறு.

Library's copy lacks back wrapper

END OF
ISSUE